**செய்தி வெளியீடு எண்: 094** **நாள் : 27.02.2015**

# பத்திரிக்கை செய்தி

**மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா** அவர்களின் வழிக்காட்டுதலின்படி, கைத்தறி நெசவாளர்களின் நலனை கருத்தில் கொண்டு, **மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் திருமதி.எஸ்.கோகுல இந்திரா** அவர்கள் 2015–16 ஆம் கல்வி ஆண்டிற்கான பள்ளிச் சிறார்களுக்கு விலையில்லா சீருடை வழங்கும் திட்டம் குறித்து தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம், தமிழ்நாடு பஞ்சாலைக் கழகம், கைத்தறி மற்றும் விசைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்க தலைவர்களுடன் 27.2.2015 இன்று கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநரக கூட்டரங்கில் விரிவான ஆய்வு கூட்டம் நடைபெற்றது .

மேற்படி ஆய்வுக் கூட்டத்தில் கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த்துறையின் முதன்மைச் செயலாளர் திரு.ஹர்மந்தர்சிங், இ.ஆ.ப., கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநர் திரு.தி.ந.வெங்கடேஷ், இ.ஆ.ப., மற்றும் கைத்தறி மற்றும் துணிநூல் கூடுதல் இயக்குநர் திரு.கே.கர்ணன், துறை உயர் அலுவலர்கள் மற்றும் சரக துணை / உதவி இயக்குநர்கள் கலந்துக் கொண்டனர்.

தமிழக அரசு 1985 ஆம் ஆண்டு முதல் பள்ளிச்சிறார்களுக்கு விலையில்லா சீருடை வழங்கும் திட்டத்தினை செயல்படுத்தி வருகிறது. விலையில்லா சீருடை திட்டத்தினை தொடர்ந்து செயல்படுத்திட ஆணை வழங்கப்பட்டு, மேற்படி திட்டத்தின்கீழ் 4 இணை சீருடைகளுக்குத் தேவையான சீருடைத் துணியினை உற்பத்தி செய்ய கைத்தறி மற்றும் பெடல் தறி நெசவாளர்களுக்கும் விசைத்தறி நெசவாளர்களுக்கும் உற்பத்தி திட்டம் வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி, 2015–16 ஆம் கல்வி ஆண்டிற்கான விலையில்லா சீருடைத் திட்டத்தின்கீழ் சரக சங்கங்களுக்கு வழங்கப்பட்டுள்ள உற்பத்தி திட்டத்தின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டுள்ள உற்பத்தி, கொள்முதல் மற்றும் சமூக நலத்துறைக்கு விநியோகம் செய்த விவரம் குறித்து **மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்** அவர்களால் விரிவாக ஆய்வு செய்யப்பட்டது.

இத்திட்டத்தின்கீழான முதல் இரு இணை சீருடைத் துணிகள் 15.3.2015–க்குள் சமூக நலத்துறைக்கு அனுப்பப்பட வேண்டியுள்ளதால், துறை அலுவலர்கள் மிகுந்த கவனத்துடனும் போர்க்கால அடைப்படையிலும் நடவடிக்கை எடுத்து குறிப்பிட காலகெடுவிற்குள் தேவையான துணிகளை நிர்ணயிக்கப்பட்ட தரத்துடன் சமூக நலத்துறைக்கு அனுப்பி வைக்க **மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்** அவர்களால் அறிவுறுத்தப்பட்டது.

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**